
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1270

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

71

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# ஆதிக்க சக்திகளை எதிர்த்த ‘புதிய பராசக்தி’!

1996-ஆம் ஆண்டு, கலைஞரின் திரைக்கதை வசனத்தில் அவரது 65-ஆவது படமாகத் திரைக்கு வந்த படம், ‘புதிய பராசக்தி’. இதனைக் கலைஞரே திரையில் தோன்றி சொல்கிறார்.

அதாவது, தான் திரைக்கதை வசனம் எழுதிய நான்காவது படமான, சிவாஜிகணேசன் நடித்த ‘பராசக்தி’ திரைப்படம் வெளிவந்த 1952-ஆம் ஆண்டுக்குப் பிறகு 43 ஆண்டுகள் கழித்து ‘புதிய பராசக்தி’ திரைப்படம் வருகிறது என்றும், இந்த 43 ஆண்டுகளில் சுமார் 60 திரைப்படங்களுக்குத் தான் திரைக்கதை வசனம் எழுதிவிட்டதாகவும் (1996-இல்) சொல்கிறார். மேலும், தனக்கு இப்போது 72 வயது என்றும், தனது பொது வாழ்க்கையின் வயது 57 என்றும், தனது கலையுலக வயது 50 என்றும் ஒரு துல்லியமான கணக்கை இத்திரைப்படத்தின் தொடக்கத்தில் தோன்றி கலைஞர் பதிவுசெய்துள்ளார். இது ஆய்வாளர்களுக்கு மிகவும் முக்கியமான, பயனுடைய பதிவாகும்.

இத்திரைப்படத்தில் செல்வா, சுகன்யா, நெப்போலியன், குமரிமுத்து, எஸ்.எஸ்.சந்திரன், எஸ்.என்.லெட்சுமி, மாஸ்டர் அருண், நளினி காந்த் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர். தயாரிப்பு, அனிதா பிலிம்ஸ் ஏ.ஜி. அகஸ்டின், இயக்கம் கௌரிராஜன், இசை தேவா, மூலக்கதை எம்.வி.எஸ்.ஹரநாதராவ்.

### படத்தின் கதை

சின்னச்சாமி (செல்வா) திரையரங்கில் சுவரொட்டி ஒட்டுவது, விளம்பர வண்டி ஓட்டுவது மற்றும் பிரசிடெண்ட் ராஜதுரைக்கு (நெப்போலியன்) எடுபிடி வேலை செய்வது என்று வாழ்கிறான். அவனை பராசக்தி (சுகன்யா) காதலிக்கிறாள்.

ராஜதுரை கிராம மக்களைப் பல வழிகளிலும் ஏமாற்றியும் பஞ்சாயத்துப் பணத்தை அபகரித்தும் வசதியாக வாழ்கிறான். மக்கள் அவனை எதிர்க்க முடியாத கோழைகளாக வாழ்கின்றனர். ராஜதுரையின் கணக்குப் பிள்ளை செவளையும் (எஸ்.எஸ்.சந்திரன்), கையாள் மயிலையும் (குமரிமுத்து), ராஜதுரைக்கு ஜால்ரா போட்டு, மக்களுக்குத் துரோகம் செய்கின்றனர்.

இச்சூழலில், சின்னச்சாமிக்கும் பராசக்திக்கும் திருமணம் நடைபெறுகிறது. ராஜதுரையிடம் சென்று ஆசி பெறுகின்றனர். பராசக்தி மீது ராஜதுரை ஆசைப்படுகிறான். அதனால், சின்னச்சாமியை ஊர்ப் பிரசிடெண்ட் ஆக்கி, தனது காரியங்களைச் சாதிக்கிறான். சின்னச்சாமி, மக்களுக்கு நன்மை செய்ய விரும்புகிறான். ஆனால், ராஜதுரையை எதிர்க்க முடியாமல் தவிக்கிறான்.

ராஜதுரை, தனது பண்ணையாள் வரதனின் மனைவி வள்ளியம்மாளைத் தனது திரையரங்கத்தில் வைத்து பாலியல் வல்லுறவு செய்து, கொன்று, ஊர்க் கிணற்றில் போட்டு விடுகிறான். சப்-இன்ஸ்பெக்டர் (நளினிகாந்த்) மூலம் வள்ளியம்மாள் தனது உடல் நலமின்மையால் தற்கொலை செய்துகொண்டாள் என்று பொய்யான அறிக்கை எழுதி, ஊர் மக்களிடம் கையெழுத்து வாங்கச்செய்து கொலையை மூடிமறைக்கிறான். உண்மை தெரிந்தும் ஏதும் செய்ய முடியாமல் சின்னச்சாமியும் கையெழுத்து இடுகிறான்.

ஒரு கட்டத்தில், சின்னச்சாமி பஞ்சாயத்து அதிகாரி சுப்பிரமணிய பிள்ளைக்கு புகார் எழுதி அனுப்புகிறான். அதிகாரி வந்து ராஜதுரையை விசாரிக்கிறார். இலஞ்சம் கொடுத்து அதிகாரியை ராஜதுரை மடக்கப் பார்க்கிறான். அதிகாரி, மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்யப் போவதாகச் சொல்லிச் செல்கிறார்.











அவரைக் கொலை செய்து கொலைப் பழியை சின்னச்சாமி மீது போட்டு, அவனுக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் பெற்றுக்கொடுக்கிறான். இந்த அதிர்ச்சியில் சின்னச்சாமியின் பாட்டி (எஸ்.என்.லெட்சுமி) இறந்துபோகிறார்.

கர்ப்பிணியான பராசக்திக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. அவளுக்கு இட்லிக்கடை வடிவும் பட்டாளத்து மாமாவும் (வாகை சந்திரசேகர்) ஆதரவாக இருக்கின்றனர்.

ஆறு ஆண்டுகள் கழித்து விடுதலையாகும் சின்னச்சாமி, ராஜதுரையின் மோசடிகளை எதிர்த்துப் போராடுகிறான். மக்களைத் திரட்டுகிறான். ஆனால், மக்கள் மீண்டும் மீண்டும் பயந்து பின்வாங்குகின்றனர்.

ராஜதுரை வீட்டில் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டி, சின்னச்சாமியை இன்ஸ்பெக்டர் (பிரதீப் ராஜ்) சிறையில் அடைக்கிறார். தன் கணவனைக் காப்பாற்றுமாறு பராசக்தி ராஜதுரையிடம் சென்று கெஞ்சுகிறாள். ஆனால், ராஜதுரை அவளைப் பாலியல் பலாத்காரம் செய்ய முற்படுகிறான். ராஜதுரையின் தலையில் தாக்கிவிட்டு, பராசக்தி தப்புகிறாள்.

அதே நேரம், காவலர்களைத் தாக்கிவிட்டு சின்னச்சாமியும் தப்புகிறான். அவனை ராஜதுரையின் அடியாட்கள் கொலை செய்து ஆற்றங்கரையில் உடலைப் போட்டு விடுகின்றனர்.

காவல் துறை வருகிறது. ஊர்மக்கள் கூடி நிற்கின்றனர். அங்கு வரும் ராஜதுரை, ஆற்றங்கரையில் கிடக்கும் உடலைப் பார்த்து, இது எனது பண்ணையாள் கருப்பையாவின் உடல், நேற்று இரவு என்னைக் கொல்ல வந்த சின்னச்சாமி என் தலையில் தாக்கிவிட்டு ஓடினான். துரத்திச் சென்ற கருப்பையாவையும் கொலை செய்துவிட்டான். என்று சப்-இன்ஸ்பெக்டரை எழுதச்செய்து, ஊர் மக்களிடம் கையெழுத்து வாங்கச் சொல்கிறான்.

அது பொய் என்று தெரிந்தும் ஊர் மக்கள் கையெழுத்திடுகின்றனர். தான் ஒருத்தி மட்டும் மறுத்துப் பயன் இல்லை என்று பராசக்தியும் கையெழுத்து இடுகிறாள். ராஜதுரையை எதிர்க்கும் பட்டாளத்து மாமாவையும் ராஜதுரையின் ஆட்கள் கொலை செய்கின்றனர்.

ஒரு நாள் ராஜதுரை பராசக்தியிடம் வந்து, புதிய சேலை ஒன்றைக் கொடுக்கிறான். அதை பராசக்தி வாங்கிக்கொள்கிறாள். இதைப் பார்த்து, ஊர்ப் பெண்கள் பராசக்தியைத் தவறாகப் பேசுகின்றனர்.

அன்று இரவு, ராஜதுரை கொடுத்த புதிய சேலையைக் கட்டி சிங்காரித்துக்கொண்டு பராசக்தி தனது மகனுடன் ராஜதுரையைத் தேடிச்சென்று காத்திருக்கிறாள். ராஜதுரை வருகிறான்; அறையின் வாயிலில் காத்திருக்கும் பராசக்தியின் மகனிடம் ரூபாய் நோட்டைக் கொடுத்து விட்டு அறைக்குள் செல்கிறான். சிறுவன் ரூபாய்த் தாளைப் பற்றவைத்து, வைக்கோல் போருக்குத் தீ வைக்கிறான். ராஜதுரையின் அடியாட்கள் தீயை அணைக்க ஓடுகின்றனர். அந்த நேரத்தில், தான் கையில் கொண்டுவந்த கோடரியைத் தன் அம்மாவிடம் ஜன்னல் வழியாகச் சிறுவன் கொடுக்கிறான். தன்னை அணைத்துக்கொள்ள முற்படும் ராஜதுரையை பராசக்தி கோடரியால் வெட்டுகிறாள்; மீண்டும் வெட்டுகிறாள். ராஜதுரை கீழே சாய்கிறான்.

மறுநாள் காலை காவல் துறை வருகிறது. ராஜதுரையின் உடலின் அருகே அமர்ந்து அவன் மனைவி அன்னம் அழுதுகொண்டு இருக்கிறாள். ஊர் மக்கள் கூடி நிற்கின்றனர்.

சப்-இன்ஸ்பெக்டர், ‘யார் கொலை செய்தது?’ என்று அதட்டுகிறார். பராசக்தியின் மகன், “என் அப்பா சின்னச்சாமிதான் நேற்று இரவு வந்து கோடரியால் வெட்டி ராஜதுரையைக் கொலை செய்தார். நானும் என் அம்மாவும் பார்த்தோம்” என்று சொல்கிறான். பராசக்தியும் ஆமாம் என்கிறாள். சப்-இன்ஸ்பெக்டர், என்ன செய்வது என்று புரியாமல் விழிக்கிறார். வேறு வழியின்றி அப்படியே எழுதி, ஊர் மக்களிடம் கையெழுத்து வாங்குகிறான்.

பராசக்தி தன் மகனை அழைத்துக் கொண்டு போகிறாள். கலைஞரின் குரல் பராசக்தியை வாழ்த்தி ஒலிப்பதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே ‘புதிய பராசக்தி’ திரைப்படத்தின் கதை.

**“என் அப்பா சின்னச்சாமிதான் நேற்று இரவு வந்து கோடரியால் வெட்டி ராஜதுரையைக் கொலை செய்தார். நானும் என் அம்மாவும் பார்த்தோம்!”**

**...காட்சி விரியும்**

## ஆட்சி செய்யவில்லை; சூழ்ச்சி செய்கிறார்கள்!

த.வெ.க.வுக்கும் விஜய்க்கும், தங்களது செயல்பாடுகளால் தமிழ்நாட்டில் மோசமாக விமர்சிக்கப்படுவோம் என்பது தெரியும். ஆனால், எந்த விமர்சனங்களுக்கும் ஏன் அலட்டிக்கொள்வதில்லை என்றால், அவர்கள் ஆட்சி செய்ய வரவில்லை; சூழ்ச்சி செய்ய வந்துள்ளதாகத் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார், டோனி என்பவர்.

“த.வெ.க. கட்சியின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது, அவர்கள் நன்மை செய்ய வேண்டும் என்று வந்தவர்களாகத் தோன்றவில்லை. நல்லாட்சி என்பது அவர்களது நோக்கம் அல்ல.

தமிழ்நாடு அரசு இயந்திரத்தைச் சீர்குலைக்கவும், நீதிமன்றங்களைக் கேலிக்கூத்து ஆக்குவதற்கும், தமிழ்நாடு என்பது அறிவார்ந்த சமூகமல்ல என்பதை நிரூபிப்பதற்கும், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் தமிழ்நாட்டைப் பிரிக்கவும் செயல்படுவதாகத் தோன்றுகிறது. த.வெ.க. இன்னும் பல கேவலங்களை அரங்கேற்றும்.

They want to break the sovereign system of Tamil nadu. இந்தியாவில் எந்தவொரு வெளிநாட்டு சக்திக்கும் கட்டுப்படாமல், ஒரு நாடு அல்லது மாநில அரசு, தன் சொந்த முடிவுகளைத் தானே எடுக்கும் முழுமையான சுதந்திரத்தைக் கொண்டிருப்பது, தமிழ்நாட்டின் வரலாற்றில் மட்டும்தான், அதிகப்படியான ஆட்சிக் கவிழ்ப்புகள், கவர்னர் ஆட்சி நிகழ்ந்ததும் தமிழ்நாட்டில் தான். மாநிலத்திற்கான இறையாண்மை, நாமே நம்மை தற்காத்துக் கொள்வதற்கான கட்டமைப்பை 2026-இல் அடைந்துவிட்டோம். அதனால்தான் இந்தியாவின் ஒட்டுமொத்த GDP வளர்ச்சியை விட தமிழ்நாடு GDP வளர்ச்சி அதிகமாக உள்ளது.

இதற்குக் காரணம், இதுவரை ஆட்சி செய்த எல்லா அரசுகளும் தானாகவே மாநில சுய அதிகாரத்தை வலியுறுத்தும். இல்லையென்றால், எதிர்க்கட்சியோ நீதிமன்றமோ மாநில சுய அதிகாரத்தைப் பெற்றுத் தரும். தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்குப் பணிந்துபோவதைத் தொடங்கிவைக்கிறது, த.வெ.க. அரசு.

கூடவே, நம்மை பிரித்து ஆள்வதற்கு விரும்புகிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்

### தலைவர் பாராட்டிய தருணம்!



2000-ஆம் ஆண்டில், அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, பெரம்பூர் ‘கலைஞர் கல்வி அறக்கட்டளை’யின் சார்பில், அதன் தலைவர் செங்கை சிவம் (அப்போதைய எம்.எல்.ஏ) தலைமையில், பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயின்று, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு இறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசளித்தோம். அன்றைய சென்னை மாநகராட்சி மேயர், இன்றைய நம் கழகத் தலைவர் வருகைதந்து, பரிசுகளை வழங்கினார். அப்போது, ‘கலைஞர் கல்வி அறக்கட்டளை’யின் செயலாளர் மற்றும் 34-வது வட்டக் கழகச் செயலாளரான என்னையும் தளபதி அவர்கள் பாராட்டியது, என் வாழ்நாள் மகிழ்ச்சியாகும். புகைப்படத்தில், அன்றைய துணை மேயர் திருமதி. பி.ஜெயச்சந்திரவதனா அவர்களும் உள்ளார்.



த.ஆறுமுகம்

**– த.ஆறுமுகம், 44-வது வட்டக் கழகச் செயலாளர், பெரம்பூர் தெற்கு, பொதுச்செயலாளர், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கம் (தொ.மு.ச), சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அண்ணா உரையே தீர்மானம்!

1960-ஆம் ஆண்டு ஜூலை 30-ஆம் தேதி, சென்னை கோடம்பாக்கத்தில், இந்தி எதிர்ப்பு மாநாட்டினை நடத்தியது கழகம். மாநாட்டுக்கு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் திரண்டுவந்தனர். மாநாட்டுக்கு வருகை தந்த பேரறிஞர் அண்ணாவுக்கு மிகப் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அண்ணா பொதுச்செயலாளராக இருந்தபோது, முதல் மாநாட்டுக்குத் தலைமைதாங்கினார். அதற்குப் பின்னர், ஒன்பது ஆண்டுகள் கழித்து, இந்த மாநாட்டுக்குத்தான் தலைமைதாங்கினார். அண்ணா அவர்களின் நீண்ட உரைதான் இந்த மாநாட்டின் தீர்மானம் என்கிற சிறப்பும் பெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900